முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 247/2018

தேதி : 07–11–2025

(பி.வா.சா.1) – திரு.செந்தில் முருகன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. தாவா சொத்தை என் அப்பா கந்தசாமி, அத்தை ஜெயக்கொடி சேர்ந்து வாங்கினார்கள் என்றால் என் அப்பாவிற்கு என் தாத்தா வாங்கிகொடுத்தது, அத்தையின் பெயரை என் தந்தை மாற்றுத்திறனாளி என்பதால் பெயரளவிற்கு சேர்க்கப்பட்டது. என் அப்பா வேலை பார்க்க முடியாது என்றால் சரியல்ல, ஓரளவிற்கு மாற்றுத்திறனாளி, அவர் வேலை பார்த்தார். என் அப்பாவின் வருமானத்தின் மூலம் தாவா சொத்தை வாங்கவில்லை என்றால் சரியல்ல, என் அப்பா கடை வைத்திருந்தார், அதில் வந்த வருமானத்தை என் தாத்தாவிடம் கொடுத்தார், என் தாத்தா கூடுதலான தொகை போட்டார்கிரையம் வாங்கினார். தாவா சொத்து எப்போது வாங்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை. என் அத்தை கைம்பெண் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு எந்த இடத்தில் ஊனம் என்றால் வலது காலில். என் தந்தை மது பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார் என்றும், எனவே நான் சொல்வது போல் அவர் சம்பாதிக்கவில்லை என்றால் சரியல்ல. என் தந்தை எப்போது இறந்தார் என்றால் 2023. தாவா சொத்து என் அத்தை வருமானத்தின் மூலம், தான் கைம்பெண் என்பதால் அவர் என் அப்பாவின் பராமரிப்பில் இருந்ததால் அவர் பெயரும் சேர்க்கப்பட்டது என்றால் சரியல்ல. என் அத்தை தான் அக்கடையை நடத்தி வந்தார் என்றால் சரியல்ல, என் அப்பா தான் அவர் பயெரில் அக்கடையை அமைத்தார். அவர் கைம்பெண் என்பதால் பெரியப்பா துறத்திவிட்டார்கள், அதனால் என் அப்பாவிற்கு திருமணம் நடக்கும்வரை வேலை பார்த்துக்கொண்டு கடையில் இருக்க சொன்னார், அப்படி தான் என் அத்தை கடையை பார்த்துக்கொண்டார்.

2. என் அத்தையின் வருமானத்தை வைத்துதான் ஊரில் மற்ற சொத்துக்களையும் வாங்கினோம் என்றால்சரியல்ல, என் அப்பாவிற்கு திருமணம்

ஆனபின்னர் அவர் சென்றுவிட்டார், சொத்தும் திருமணத்திற்கு பின்னர் தான் வாங்கப்பட்டது. 2016ல் என் அத்தைக்கு உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது என்றும், எனவே அவரை துறத்திவிட்டோம் என்றால் சரியல்ல, என் சகோதரி தான் பராமரித்து வந்தார். நான் சொல்வது தவறு என்றும், அவர் சித்தரேவு என்ற இடத்தில் அவருடைய சகோதரியின் வீட்டில் வசித்து வந்தார் என்றால் ஆமாம், அந்த சகோதரியின் மகனை தான் என் அக்கா திருமணம் செய்துள்ளார். என் அத்தை அவரை பராமரித்து கொள்வதற்காக வழக்கை சொத்தை வாதியிடம் கிரையம் செய்தார் என்றால் எங்களுக்கு தெரியாமல் கிரையம் செய்தார்.

3. அதுசம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. என் தகப்பனார் உயிரோடு இருக்கும்போது அவருடைய பாகத்தை பிரிக்கவில்லை என்றால் சரிதான். பிரித்திருந்தால் என் அப்பா என்னிடம் சொல்லியிருப்பார் என்றால் சரிதான், ஆனால் தாவா சொத்தில் உள்ள வீட்டை என் பெற்றோர்கள் தான் கட்டினார்கள். வீட்டுவரி ரசீது ஜெயக்கொடி பெயரில் தான் இருந்தது என்றால் சரியல்ல, என் அப்பா பெயரில் இருந்தது, தற்போது என் அம்மா பெயரில் உள்ளது. நான் சொல்வது தவறு என்றும், அது வாதி பெயரிலுள்ளது என்றால் சரியல்ல. மின் இணைப்பு என் அத்தை பெயரிலுள்ள து என்றால் ஒரு இணைப்பு அத்தை பெயரிலும், மற்றொரு இணைப்பு என் அப்பா பெயரிலும் உள்ளது. தற்போது அது வாதி பெயரில் உள்ளது என்றால் அதை எங்களுக்கு தெரியாமல் மாற்றியஹள்ளார்கள். நான் சொல்வது தவறு என்றும், என் அத்தைக்கும் அதில் உரிமை இருந்ததால் தான் மின் இணைப்பில் அவர் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்தோம் என்றும், எனவே தான் வாதி தாண்டிக்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் வழக்கு சொத்தில் பிறந்ததிலிருந்து நாங்கள் தான் குடியிருக்கிறோம் , புகாரின் விசாரணையில் வாதியின் மீது தவறு இருப்பதாக சொன்னதால் நாங்கள் நீதிமன்றத்தில் பார்த்து கொள்கிறோம் என்று சொன்னார்.

4. வழக்கு சொத்து என் அத்தையின் வருமானத்தின் மூலம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் என் அத்தைக்கு பங்குள்ளது என்றும், அதை கிரையம் செய்ய அவருக்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. பிராது சொத்தில்

நாங்கள் அத்துமீறி குடியிருந்து வருவது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல, நாங்கள் அத்துமீறி நுழையவில்லை. எனவே வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

K RENUGADEVI

Digitally signed by K RENUGADEVI
Date: 2025.11.07 13:28:53 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.